**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No.38/2017**

திருமதி.ஜெயந்தி (D.W –5) **05.08.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு **1, 5** பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. எனக்கும் என்னுடைய கணவர் கோவிந்தராஜ்க்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 33 வருடங்கள் ஆகிவிட்டது. தாவா சொத்து எப்போது கிரயம் செய்யப்பட்டது என்றால் நான் திருமணம் செய்வதற்கு முன்பே அந்த சொத்துக்கள் இருந்து வந்தது. தாவா சொத்தை தவிர என்னுடைய மாமனார் ராமசாமி கவுண்டருக்கு வேறு பூர்வீக சொத்துக்கள் இருந்ததா என்றால் இல்லை என்னுடைய மாமனாரின் சொந்த ஊர் எது என்றால் குப்புச்சிபாளையம். என் மாமனார் பெயரில் உள்ள சொத்தில் உரிமை ஆவணத்தை படித்து பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். எந்த வருடம் யாரிடம் இருந்து என் மாமனார் தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் தெரியாது.

2. தாவா சொத்தை தவிர என்னுடைய மாமனார் கதர் கடைக்கு உயிருடன் இருந்தபோது வேலைக்கு சென்று வந்தார் என்றால் ஆமாம். காட்டன் மார்க்கெட்டிலும் கணக்கு வழக்குகள் எழுதுவார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து ராமசாமி கவுண்டரின் பூர்வீக சொத்து இல்லை. சுயாஜித சொத்து என்றால் தவறு. ராஜேஸ்வரி ப்ளீச்சிங் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. நான் திருமணம் செய்து வந்தபோது அந்த நிறுவனம் நடைமுறையில் இருந்தது. பிரின்ஸ் டையிங் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் தெரியாது அதுவும் இருந்து வந்தது.மேலே சொன்ன நிறுவனங்களில் என்னுடைய கணவர் பங்குதாரராக இருந்து வந்தார்

என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை தவறாக சாட்சியும் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. ராஜேஸ்வரி ப்ளீச்சிங் நிறுவனம் எப்போது நிறுத்தப்பட்டது என்றால் தெரியாது. ராஜேஸ்வரி ப்ளீச்சிங் பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்கு உரிய ஆவணங்களை பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். என்ன ஆவணங்கள் பார்த்தேன் என்றால் ஆவணங்கள் பெயர் தெரியாது. மாமனார் பெயரில் பொதுவாக இருந்தது. அந்த இரண்டு நிறுவனங்களும் என்னுடைய மாமனார் தனிப்பட்ட முறையில் ஆரம்பித்து நடத்தி வந்த நிறுவனங்கள் என்றால் தவறு. என் மாமனார் எப்போது இறந்து போனார் என்றால் 14 வருடங்கள் ஆகிவிட்டது. நான் தற்போது வசித்து வருவது வீரபாண்டி பல தோட்டத்தில் என்றால் தவறு. எங்கு வசித்து வருகிறேன் என்றால் தற்போது கொடுவாயில் 5 வருடங்களாக வசித்து வருகிறேன்.

4. என்னுடைய அப்பா எனக்கு எவ்வளவு சொத்துக்கள் வீரபாண்டி பல தோட்டத்தில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் 1 ½ ஏக்கர் எழுதிக் கொடுத்துள்ளார். அந்தச் சொத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் வரிசையாக 100 வீடுகள் உள்ளது. தற்சமயம் அந்த சொத்துக்கள் எல்லாம் என்னிடம் இல்லை என்று சாட்சி தன்னிச்சையாக முன்வந்து. கூறுகிறார். ஐந்து வருடங்களுக்கு முன்பே விற்று விட்டதாக கூறுகிறார். அந்தத் தோட்டத்தில் வீடு கட்டி உள்ளீர்கள் என்றால் ஆமாம். மேலே சொன்ன சொத்துக்களின் கட்டப்பட்டுள்ள வீடுகளில் வாடகையை பெற்றுக்கொண்டு என்னுடைய கணவர் தனிப்பட்ட முறையில் இரண்டு சக்கர வாகன பட்டறை நடத்தி வந்தார் என்றால் தவறு.

5. என்னுடைய கணவர் எந்த காலத்திலும் ராஜேஸ்வரி ப்ளீச்சிங் மற்றும் பிரின்ஸ் டையிங்கில் பங்குதாரராக இருந்து பணியாற்ற வில்லை, பொய் சாட்சி மளிக்கிறேன் என்றால் தவறு. ராமசாமிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததற்கு மருத்துவ ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எங்கு ராமசாமி மருத்துவம் பார்த்து வந்தார் என்றால் கோயம்புத்தூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அம்மாதிரி சிகிச்சையே பெறவில்லை பொய்சாட்சி மளிக்கிறேன் என்றால் தவறு. தற்சமயம் பிரின்ஸ் டையிங் நிறுவனம் நடந்து வருகிறதா என்றால் இல்லை.

6. ராமசாமி உயிருடன் இருந்த சமயத்தில் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் தொழிலை நிறுத்திவிட்டார் என்றால் ஆமாம். 21.07.2011 ம் தேதியில் ராமசாமி அவருடைய தனிப்பட்ட சொத்துக்களை அவருடைய மனைவி சரஸ்வதி பெயருக்கு ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி உள்ளார் என்றால் தெரியாது. 25.07.2011 ம் தேதியில் டையிங் தொழிலை பொறுத்து சரஸ்வதி பெயருக்கு ஒரு வர்த்தமான கடிதம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. என்னுடைய மாமியார் சரஸ்வதி ஐந்தாம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டிற்குள் இருந்து வருகிறார் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. சரஸ்வதி வீடு எங்கு உள்ளது என்றால் முருகம்பாளையத்தில் உள்ளது. சரஸ்வதி வசிக்கும் வீடு அவருடைய பெயரில் உள்ளது என்றால் சரி. என்னுடைய மாமனார் கடைசி காலத்தில் அங்கு தான் வசித்து வந்தார் என்றால் சரி. அந்த வீட்டில் தான் குடும்பம் நடத்தி வந்தார் என்றால் ஆமாம்.

7. ராமசாமி இறந்த பிறகு சரஸ்வதி அந்த வீட்டில்தான் வசித்து வருகிறார் என்றால் ஆமாம். தற்சமயம் சரஸ்வதி அவருடைய மகள் ஐந்தாம் பிரதிவாதி

வீட்டுக்கு சென்று விட்டார் என்று சாட்சி தனிச்சியாக கூறுகிறார். தான செட்டில்மெண்ட் ஆவணத்தை சரஸ்வதி, சுமதி, சுமதியின் கணவர் மற்றும் அவர்களுடைய வழக்கறிஞர் சேர்ந்து தயார் செய்து விட்டார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஐந்தாம் பிரதிவாதி சுமதி என் கணவர் எனக்கு என்ன உறவு என்றால் சொந்த சித்தப்பா உறவு. 22.11.2016 ம் தேதியில் சரஸ்வதி மற்றும் சுமதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அசல் வழக்கு எண் 100/ 2017 இல் வாதி தயாநிதி பெயருக்கு எழுதி கொடுத்து விட்டார்கள் என்றால் சரி. 8. 25.11.2016 ம் தேதியில் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தை பொறுத்து தயாநிதி பெயருக்கு ஒரு வருத்தமான கடிதம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்தை கடைசியாக எப்போது சென்று பார்த்தீர்கள் என்றால் ஆறு வருடங்கள் இருக்கும். தாவா சொத்தில் டையிங் நிறுவனத்திற்கு உரிய மிஷின்கள் எதுவும் இல்லை என்றால் சரி. என்னுடைய மாமனார் உயிருடன் இருந்தபோதே விஷயங்கள் அனைத்தையும் விட்டு வங்கி கடனை கட்டி விட்டார் என்றால் தவறு மிஷின்கள் இருந்தது. என்னுடைய மாமனார் எந்த வங்கியில் கடன் பெற்று இருந்தார் என்றால் தெரியாது. சாட்சி தற்போது கார்ப்பரேஷன் வங்கியில் கடன் பெற்றதாக கூறுகிறார்.

9. கார்ப்பரேஷன் வங்கியில் என்னுடைய மாமனார் பெற்ற கடன் முழுவதையும் என்னுடைய மாமியார் சரஸ்வதி திருப்பி செலுத்தினார் என்றால் அப்படித்தான் சொல்கிறார்கள். அந்த கடன் விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரி. பிரின்ஸ் டையின் நிறுவனத்தில் கட்டடங்களை இடித்து அசல் வழக்கு எண் 100/2017 வாதி மாற்றி அமைத்து கட்டடங்கள் கட்டி உள்ளார் என்றால் தயாநிதி செய்திருப்பார். என்னுடைய மகன்கள் என்ன வேலை பார்க்கிறார்கள் என்றால் உதயகுமார் உணவகம் நடத்தி வருகிறார். சிறிய மகன்

ஐடி நிறுவனத்தில் வேலை பார்க்கிறார். தாவா சொத்தில் எத்தனை மின் இணைப்புகள் உள்ளது என்றால் தெரியாது.

10. தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்தில் வருமானத்தைக் கொண்டு கிரையம் பெற்றதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. என்னுடைய மாமனார் உயில் பத்திரம் எழுதியது எனக்கு நேரில் தெரியாது என்றால்என்னுடைய மாமனார் இறப்பதற்கு முன்பு அவருடைய நான்கு மகன்களுக்கும் சொத்துக்களை எழுதி வைப்பதாக சொன்னார். அந்த உயிர் ஆவணத்தை ரத்து செய்து விட்டதை சொன்னாரா என்றால் இல்லை. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உயில் ரத்து செய்யப்பட்டு விட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் தவறு ரத்து செய்ததாக என் மாமனார் என்னிடம் சொல்லவில்லை. முதல் விசாரணையில் அவ்வாறு சொல்லிவிட்டு தற்சமயம் வழக்கிற்காக மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

11. முதல் விசாரணை வாக்குமூல சங்கதிகள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் என்னுடைய மகன் சொல்லி தயார் செய்யப்பட்டது. பொது சுத்திகரிப்பு நிலையத்தில் என்னுடைய மாமனார் 2 கோடி ரூபாய் வைப்பீடு செய்ததாக சொன்னாரா என்றால் ஆமாம். அந்த நிறுவனத்தில் எவ்வளவு தொகை கட்ட வேண்டிய உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொது சுத்தகரிப்பு நிலையத்தில் செலுத்தப்பட்ட தொகை என்னுடைய மாமனார் தனிப்பட்ட முறையில் செலுத்தினார் என்றால் தவறு. பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் உரிமையாளர் என்ற முறையில் தனிப்பட்ட முறையில் என் மாமனார் அந்த தொகையை செலுத்தினார் என்றால் சரி. பொதுவாக கட்டி வைத்தார். ரசீது அவர் பெயரில் உள்ளது என்றால் சரி.

12. அசல் வழக்கு எண் 100/2017 குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் முழுவதும் தயாநிதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரி. அசல் வழக்கு

எண் 38/2017–இல் கூறி உள்ள பாகம் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் தவறு. அசல் வழக்கு எண் 98/2021 இல் வாதுரைத்து உள்ளவாறு பொது சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள பங்குகளிலும் பாகம் இல்லை என்றால் தவறு. அசல் வழக்கின் 100/2017 வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் மற்ற இரண்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**OS/98/2021 – 8 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பொது சுத்திகரிப்பு நிலையத்தில் இரண்டு கோடி ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அம்மாதிரி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரூபாய்.38,37,063/– தான் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. பொது சுத்திகரிப்பு நிலையத்தின் தண்ணீர் இறைக்கும் உரிமைக்கு உரிய தொகையை ஏப்ரல் மாதம் 2012 வரை செலுத்தாத காரணத்தால் உரிமை ரத்து செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. அதைப் பற்றி எனக்குத் தெரியாது எட்டாம் பிரதிவாதிக்கும் வழக்கும் சம்பந்தமில்லை அவருக்கு எதிரான வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

அசல் வழக்கு எண். 100/2017 ல் வாதி 1, 5 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.08.05 18:38:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.